# கணணி மற்றும் இணையப் பயன்பாட்டிற்கான முழுத் தொகுப்புத் தமிழகராதி வடிவமைப்பு - சாத்தியங்களும் முன்மாதிரியும்

தமிழில் தற்போது பல்வேறுவிதமான அகராதி வடிவமைப்பு முயற்சிகள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. திரு. வீரமாமுனிவர் தொகுத்த சதுரகராதி முதல் இன்றைய தற்காலத் தமிழகராதி வரை வெவ்வேறு விதமான வடிவங்களில், நோக்கில் அகராதிகள் வடிவமைக்கப்பட்டிருந்தாலும் தமிழுக்கு இன்றைக்கான கணணி மற்றும் இணையப் பயன்பாட்டிற்கான முழுத் தொகுப்பு அகரமுதலி வடிவமைப்பு காலத்தால் மிகவும் தேவைப்படுகிற ஒன்றாக வளர்ந்திருக்கிறது.

பழைய 16 நிகண்டுகளில் மிகவும் உபயோகிக்கப்பட்ட சூடாமணி நிகண்டு மற்றும் பிங்கள நிகண்டு போன்றவைகளும் அபிதான சிந்தாமணி முதலியவையும் தமிழ் பல்கலைக் கழகத்தின் தமிழ் பேரகராதியும், திரு. பாவாணர் குழுவினரால் தொகுக்கப்பட்ட வேர்ச்சொல் அகரமுதலியும், கிரியா மற்றும் நர்மதா பதிப்பகத்தினரால் வெளியிடப்பட்ட தற்காலத் தமிழகராதிகளும், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினரால் வெளியிடப்பட்ட கழகத் தமிழகராதியும் திரு. கதிரைவேற்பிள்ளை அவர்களால் தொகுக்கப்பட்ட தமிழகராதியும் அடிப்படை அளவுகோல்களாக கருதப்பட்டு அது தொகுக்கப்பட வேண்டும்.

ஒவ்வொரு சொல்லையும் உச்சரிக்கும் பாங்கு ஒலி வடிவிலும், பொருள் விளக்கங்கள் சாத்தியமானால் ஒளி,ஒலிக் கோவைகளாகவும் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். ஒவ்வொரு சொல்லும் இலக்கியங்களில் கையாளப்பட்ட விதம் தனியாக காட்டுகளாக தொகுக்கப் பட்டிருக்க வேண்டும். மட்டுமன்றி எந்த இடங்களில் எல்லாம் அகராதிகளின் பொருட்பான்மையிலோ இதர கருதுகோள்களிலோ முரண்பாடு இருக்கிறதோ அவற்றை எல்லாம் அந்தச் சொல்லுக்கான விளக்கங்கள் சொல்லப்படும் போதே துணை விளக்கமாகக் காட்டப் பட வேண்டும்

உதாரணமாக சுரணை என்கிற சொல்லுக்கு சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் அகராதி ஸ்மரண என்கிற சமஸ்கிரதச் சொல்லை வேர் மூலமாக சுட்டிக்காட்டுகிறது, ஆனால் திரு பாவாணர் தமது வேர்ச்சொல் ஆய்வுக் கட்டுரைகளில் இதை மறுத்து சுர் என்கிற தமிழ் வேர்ச்சொல்லை மூலமாகக் காட்டுகிறார், அதே போல் அரிவாள் என்கிற சொல்லை அருவாள் என்று உபயோகிப்பதையும் மறுக்கிறார்கள் திரு,அருளி போன்ற தற்போதைய வேர்ச்சொல் ஆய்வாளர்கள்

எனவே இப்படியான தொகுப்பகராதியின் வடிவமைப்பில் கையாள வேண்டிய தரவுதள(Database) வடிவமைப்பும், அவற்றிற்குள்ளான தேடுதல் மென்பொருள் வடிவமைப்பின் முன்மாதிரிகளையும் இந்த ஆய்வு முன்வைக்கிறது.

---

Paper Prepared by:
R.Duraipandi
Ultimate Software Solution
2/498, Abirami Illam,Vedathri Nagar,
Collectorate Post, Dindigul -624005.
Ph:91-451-433 088.
E-Mail : Ultimatedgl@yahoo.com